# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 39 | 4 Pages | 09.09.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 39 | 4 பக்கங்கள் | 09.09.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## 7 தொகுதி இடைத்தேர்தல் முடிவு அதிக வெற்றிகளை குவித்த "இந்தியா" கூட்டணி

டெல்லி, செப். 9

ஆறு மாநிலங்களில் உள்ள ஏழு சட்டமன்ற தொகுதிகளுக்கு கடந்த 5ந்தேதி இடைத்தேர்தல் நடைபெற்றது. இன்று வாக்குகள் எண்ணப்படும் எனஅறிவிக்கப்பட்டநிலையில், காலையில் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள பகேஷ்வர், உத்தர பிரதேசத்தில் உள்ள கோசி, கேரளாவில் உள்ள புதுபள்ளி, மேற்கு வங்காளத்தில் உள்ள துப்குரி, ஜார்க்கண்டில் உள்ள தும்ரி, திரிபுராவில் உள்ள போக்சாநகர், தன்புர் ஆகிய தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்நிலையில், இந்த ஏழு தொகுதிகளில் "இந்தியா கூட்டணி" பெரும்பாலான தொகுதி



களில் வெற்றியை குவித்துள்ளது. கேரள மாநிலம் புதுப்பள்ளி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளரும், கேரள முன்னாள் முதல்வருமான உம்மன் சாண்டியின் மகனுமான சாண்டி உம்மன் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். சாண்டி உம்மன் (காங்கிரஸ்) 80,144 வாக்குகளும், ஜெய்க் சி தாமஸ் (சிபிஐஎம்) 42,425 வாக்குகளும், லிஜின் லால் (பாஜக) 6,558 வாக்குகளும் பெற்றனர். இதன்மூலம், பா.ஜ.க டெபாசிட்டை இழந்துள்ளது. உத்தரப்பிரதேசத்தில் உள்ள கோசி தொகுதியில் சமாஜ்வாடி முன்னிலையில் உள்ளது. மேற்கு வங்கத்தில் உள்ள துப்குரி தொகுதியில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் வென்றுள்ளது. ஜார்க்கண்டில் ஆளும் ஜே.எம்.எம் (ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சி) வேட்பாளர் பேபி தேவி 17 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் (என்டிஏ) வேட்பாளர் யசோதா தேவியை தோற்கடித்து வெற்றி பெற்றார். திரிபுராவில் போக்சாநகர், தன்புர் ஆகிய தொகுதிகளில் பா.ஜ.க. வென்றுள்ளது. உத்தரகாண்ட் மாநிலத்தில் இடைத்தேர்தல் நடைபெற்ற பகேஷ்வர் தொகுதியில் பா.ஜ.க வெற்றி பெற்றுள்ளது. விரைவில் ஐந்து மாநில சட்டமன்ற தேர்தல், 2024 பாராளுமன்ற தேர்தல் நடைபெற இருக்கும் நிலையில், எதிர்க்கட்சிகளின் "இந்தியா" கூட்டணிக்கு இது பரிசோதனையாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. அதன்படி, இடைத்தேர்தல் நடைபெற்ற ஏழு தொகுதிகளில் 4 தொகுதிகளில் "இந்தியா" கூட்டணி வெற்றிப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சாலை விபத்தில் சிக்கியவர்களை வாகனங்களில் இருந்து மீட்க புதிய திட்டம்: மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை, செப். 9

'வீரா' அவசரகால மீட்பு மற்றும் விபத்துக்களிலிருந்து மீட்கும் வாகனத்தின் பயன்பாட்டினை முதலமைச்சர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காவல்துறையினரின் செயல்முறை விளக்கத்தை பார்வையிட்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை சார்பில் சாலை விபத்தில் சிக்கியவர்களை விபத்துக்குள்ளான வாகனங்களில் இருந்து மீட்டெடுக்கும் பணிக்கான



'வீரா' அவசரகால மீட்பு மற்றும் விபத்துக்களிலிருந்து மீட்கும் வாகனத்தின் பயன்பாட்டினை கொடியசைத்து தொடங்கி வைத்து, காவல் துறையினரின் செயல்முறை விளக்கத்தை பார்வையிட்டார். இத்திட்டமானது, சாலை விபத்தில் சிக்கிய மற்றும் சேதமடைந்த வாகனங்களில் சிக்கிக்கொள்ளும் பாதிக்கப்பட்ட நபர்களை, தேவையான அனைத்து உபகரணங்கள் மற்றும் நன்கு பயிற்சி பெற்ற காவல் குழுவினர் உதவியுடன் மீட்பதற்கான ஒரு முன்னோடி திட்டம் ஆகும்.

# பல்லடத்தில் கம்யூனிஸ்டு கட்சியினர் மறியல்



பல்லடம், செப். 9

பல்லடம் பஸ் நிலையம் முன்பு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சமூக பாதுகாப்புடன் கூடிய வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும். அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்திட ஒன்றிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க கோரி சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. முன்னதாக பல்லடம் சார்பதிவாளர் அலுவலகம் முன்பு இருந்து பேரணி தொடங்கி பல்லடம் பஸ் நிலையம் முன்பாக சென்று சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி, மற்றும் ஒன்றிய அரசின் நடவடிக்கைகளை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன. இந்த மறியல் போராட்டத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். மாவட்டக் குழு உறுப்பினர்கள் பி.சம்பத், பவித்ரா தேவி மற்றும் பல்லடம் ஒன்றிய செயலாளர் ஆர்.பரமசிவம், பொங்கலூர் ஒன்றிய செயலாளர் பி. பாலன் மற்றும் விவசாயிகள் சங்கத்தின் சார்பாக வை.பழனிசாமி, கே .வி. சுப்பிரமணியம் வாலிபர் சங்கம் சார்பாக சி.முருகேஷ், சிவக்குமார், நாகேந்திரன் இந்திய மாணவர் சங்கம் சார்பாக பிரவீன் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.




# ஒரே நாடு, ஒரே தேர்தல் சாத்தியமில்லை

விருதுநகர், செப். 9
விருதுநகர் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை பயணம் நிறைவடைந்து ஓராண்டு ஆகியுள்ளது. இதையொட்டி சிவகாசியில் காங்கிரஸ் சார்பில் ஊர்வலம் நடந்தது. இதில் மாணிக்கம்தாகூர் எம்.பி., அசோகன் எம்.எல்.ஏ., மாவட்ட தலை வர்கள் ராஜாசொக்கர். ரங்கசாமி, மாநகர் தலைவர் சேர்மத்துரை, மாநில மாணவர் காங்கிரஸ் தலைவர் சின்னதம்பி, மாவட்ட செய்தி தொடர்பாளர் மீனாட்சிசுந்தரம், கவுன்சிலர் ரவிசங்கர், ஜீ.பி.முருகன், முன்னாள் கவுன்சிலர் கணேசன், வட்டார தலைவர் பைபாஸ் வைரகுமார், ஷேக் உள்பட பலர் கலந்து கொண்டனர். சிவகாசி காமராஜர் சிலையில் இருந்து நகரின் முக்கிய வீதிகள் வழியா காங்கிரஸ் கட்சியினர் நடைபயணம் சென்றனர். பின்னர் மாணிக்கம் தாகூர் எம்.பி. நி ரு ப ர் க ளி ட ம் கூறியதாவது: ராகுல்காந்தி நடைபயணம் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு புதிய திசையை கொடுத்தது. அதை போலவே இந்தியாவுக்கும் புதிய அரசியலை கொடுத்துள்ளது. இந்த அரசியல் மாற்றம் என்பது கடந்த ஆண்டு செப்.7 ந்தேதி தொடங்கி யது. இதை கொண்டாடும் வகையில் இந்தியா முழுவதும் 900 இடங்களில் இந்த நடைபயணம் நடக்கி றது. இந்தியாவில் உள்ள அனைத்து மதத்தினரையும் காங்கிரஸ் கட்சி மதிக்கிறது. பா.ஜ.க. மத அடிப்படையில் விவாதம் செய்கிறது. இந்தியா என்பது பாரதத்தை தான் குறிக்கிறது. ஆனால் வேண்டும் என்றே பா.ஜ.க. இதனை விவாதமாக்கி வருகிறது. எதிர்கட்சிகளின் கூட்டணிக்கு இந்தியா என்று பெயர் வைத்த போதே பா.ஜ.க.வுக்கு பயம் வந்து விட்டது. இந்தியா கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் குறித்து தேர்தல் காலத்தில் உரிய முறையில் அறிவிக்கப்படும். ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது சாத்தியமில்லை. பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் தேர்தல் முதல், பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் வரை ஒரே நேரத்தில் நடத்த சாத்தியமே இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# வெள்ளகோவிலில் விசைத்தறி கூடம் அமைக்க மானியம்



வெள்ளகோவில், செப். 9
மத்திய அரசு திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவு பயிற்சி வழங்கப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப் பட்டன, நெசவாளர் அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அடையாள அட்டை பெற விண் ண ப் ப ங் க ள் பெறப்பட்டன.

வெள்ளகோவிலில் நேற்று கைத்தறி நெசவு பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது. சர் பிட்டி தியாகராயர் தொழிற்சங்க பொதுச் செயலாளர் கே.ஜி. நட்ராஜ் முன்னிலையில், சேலம் நெசவாளர் சேவை மைய இணை இயக்குனர் கார்த்திகேயன் கலந்து கொண்டு சான்றிதழ்கள் வழங்கினார். மத்திய அரசு திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவு பயிற்சி வழங்கப்பட்டு,
ப யி ற் சி முடித்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, நெசவாளர்களுக்கு 90 சதவீத மானியத்துடன் தறி மற்றும் உபகரணங்கள் , நெசவாளர் தறி கூடம் அமைக்க ரூ.1லட்சத்து 20 ஆயிரம் மானியம் பெறவும், நெசவாளர் அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அடையாள அட்டை பெற விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

# வெள்ளகோவிலில் ரூ.27 லட்சத்திற்கு சூரியகாந்தி விதை ஏலம்

வெள்ளகோவில், செப்.9
54 விவசாயிகள் கலந்து கொண்டு 57 ஆயிரத்து 424 கிலோ சூரியகாந்தி விதையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

சூரியகாந்தி விதை அதிகபட்சமாக ரூ.50.59க்கும், கு றை ந் த ப ட் ச ம் ரூ.46.57க்கும் கொள்முதல் செய்தனர்.

வெ ள் ள கோ வி ல் வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரம்தோறும் செவ்வாயன்று தேங்காய் பருப்பும், வியாழனன்று சூரியகாந்தி விதையும் ஏலம் நடைபெற்று வருகிறது.

ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு கரூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை. திருப்பூர், ஈரோடு மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு தேங்காய் பருப்பு மற்றும் சூரியகாந்தி விதை விற்பனைக்கு கொண்டு வந்து விற்று செல்கின்றனர். நேற்று வியாழக்கிழமை 54 விவசாயிகள் கலந்து கொண்டு 57 ஆயிரத்து 424 கிலோ சூரியகாந்தி விதையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில் முத்தூர், வெள்ளகோவில், காங்கேயம், ஈரோடு பகுதியை சேர்ந்த 7 வியாபாரிகள் கலந்து கொண்டு ஒரு கிலோ சூரியகாந்தி விதை அதிகபட்சமாக ரூ.50.59க்கும், கு றை ந் த ப ட் ச ம் ரூ.46.57க்கும் கொள்முதல் செய்தனர். நேற்று மொத்தம் ரூ.27லட்சத்து 63ஆயிரத்து 553க்கு வணிகம் நடைபெற்றது.

இ த் த க வ லை வெள்ளகோவில் ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சி. மகுடேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# திண்டிவனத்தில் தங்கியிருந்த கேரளாவை சேர்ந்த வியாபாரிக்கு கழுத்தில் பலத்த காயம் நண்பரிடம் போலீசார் விசாரணை

விழுப்புரம், செப். 9
கேரள மாநிலம் திருச்சூரை சேர்ந்தவர்கள் ஜோய்ஆண்டனி (வயது 50), முரளி தாஸ் (48). இருவரும் நண்பர்கள். இவர்கள் திண்டிவனத்தில் உள்ள தனியார் தங்கும் விடுதியில் தங்கி சோபா செட் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் நேற்று இரவு ஜோய்ஆண்டனி பலத்த ரத்த காயங்களுடன் தனியார் தங்கும் விடுதி வெளியே நின்று கொண்டு இருந்தார். அப்பொழுது அந்த வழியாக சென்ற போலீசார் அவரை தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இது தொடர்பாக அவரது நண்பர் முரளி தாசை போலீஸ் நிலையம் அழைத்துச் சென்று போலீசார் விசாரணை நடத்தினர். இதில் இருவரும் மது அருந்தியபோது, ஏற்பட்ட தகராறில் ஜோஸ்ஆண்டனி பலத்தகாயம்அடைந்தது தெரியவந்தது. இருவருமே மது போதையில் இருப்பதால், போலீசாரால் சரியான முறையில் விசாரணை நடத்தமுடியவில்லை.

அவர்களின் போதை தெளிந்தபின்னர் விசாரணை நடத்த போலீ சார் திட்டமிட்டுள்ளனர். காயமடைந்த ஜோஸ்ஆண்டனியில் கழுத்தில் காயம் உள்ளதால் அவ ரால் பேச முடியவில்லை. அவருக்கு ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# பெருமாநல்லூர் அருகே விபத்தில் கிராம நிர்வாக அலுவலர் பலி

பெருமாநல்லூர், செப். 9
பெருமாநல்லூர் பாரதி நகர் பிரிவு அருகே இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். தாமோதரனின் (37) இருசக்கர வாகனத்தின் மீது சேதுராமன் இருசக்கர வாகனம் மோதியது.

அவிநாசியை அடுத்த பெருமாநல்லூர் எஸ். எஸ்.நகரைச் சேர்ந்தவர் சேதுராமன் (43).

இவர், ஊத்துக்குளி ஒன்றியம், காவுத்தம்பாளையம் ஊராட்சியில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில், இவர் பெருமாநல்லூர் பாரதி நகர் பிரிவு அருகே இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது எதிரே வந்த பெருமாநல்லூர் லட்சுமி கார்டன் பகுதியை சேர்ந்த திருமூர்த்தி மகன் தாமோதரனின் (37) இருசக்கர வாகனத்தின் மீது சேதுராமன் இருசக்கர வாகனம் மோதியது.

இதில், இருவரும் பலத்த காயமடைந்தனர். திருப்பூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சேதுராமன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதுகுறித்து பெருமாநல்லூர் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# திண்டிவனத்தில் தங்கியிருந்த கேரளாவை சேர்ந்த வியாபாரிக்கு கழுத்தில் பலத்த காயம் நண்பரிடம் போலீசார் விசாரணை

விழுப்புரம், செப். 9
கேரள மாநிலம் திருச்சூரை சேர்ந்தவர்கள் ஜோய்ஆண்டனி (வயது 50), முரளி தாஸ் (48). இருவரும் நண்பர்கள். இவர்கள் திண்டிவனத்தில் உள்ள தனியார் தங்கும் விடுதியில் தங்கி சோபா செட் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் நேற்று இரவு ஜோய்ஆண்டனி பலத்த ரத்த காயங்களுடன் தனியார் தங்கும் விடுதி வெளியே நின்று கொண்டு இருந்தார். அப்பொழுது அந்த வழியாக சென்ற போலீசார் அவரை தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இது தொடர்பாக அவரது நண்பர் முரளி தாசை போலீஸ் நிலையம் அழைத்துச் சென்று போலீசார் விசாரணை நடத்தினர். இதில் இருவரும் மது அருந்தியபோது, ஏற்பட்ட தகராறில் ஜோஸ்ஆண்டனி பலத்தகாயம்அடைந்தது தெரியவந்தது. இருவருமே மது போதையில் இருப்பதால், போலீசாரால் சரியான முறையில் விசாரணை நடத்தமுடியவில்லை.

அவர்களின் போதை தெளிந்தபின்னர் விசாரணை நடத்த போலீ சார் திட்டமிட்டுள்ளனர். காயமடைந்த ஜோஸ்ஆண்டனியில் கழுத்தில் காயம் உள்ளதால் அவ ரால் பேச முடியவில்லை. அவருக்கு ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# குடிபோதையில் விபத்தை ஏற்படுத்திய தனியார் பள்ளி டிரைவர் கைது



பல்லடம், செப். 9
வேனில் சுமார் 15க்கும் மேற்பட்ட குழந்தைகளை ஏற்றிக்கொண்டு பல்லடம் நோக்கி வந்து கொண்டிருந்தார். முன்னாள் சென்று கொண்டிருந்த கார் மீது பள்ளி வேன் மோதியது.

பல்லடம் அருகே உள்ள குங்குமம் பாளையம் பகுதியில் தனியார் பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு பள்ளி வாகன ஓட்டுனநராக கோவை காந்தி புரத்தைச் சேர்ந்த மணி என்பவரது மகன் பிரவீன் குமார் (வயது 31) என்பவர் கடந்த 3 வருடங்களாக பணிபுரிந்து வருகிறார். இந்த நிலையில் நேற்று மாலை பள்ளி முடிந்தவுடன் பள்ளிக்குச் சொந்தமான வேனில் சுமார் 15க்கும் மேற்பட்ட குழந்தைகளை ஏற்றிக் கொண்டு திருப்பூர் பல்லடம் மெயின் ரோட்டில் பல்லடம் நோக்கி வந்து கொண்டிருந்தார். கரையாம்புதூர் என்ற இடம் அருகே சென்றபோது, முன்னாள் சென்று கொண்டிருந்த கார் மீது பள்ளி வேன் மோதியது. இதில் காரின் பின்புற கண்ணாடி உடைந்தது. பள்ளிவேனுக்குள் இருந்த குழந்தைகள் நிலை தடுமாறி அய்யோ அம்மா என்று அலறினர். இந்த நிலையில் வேனை நிறுத்தாமல் மீண்டும் வேகமாக பிரவீன் குமார் செலுத்தியுள்ளார். இதை அடுத்து விபத்து ஏற்பட்ட கார் உரிமையாளர், பள்ளி வேனை துரத்தி ராயர் பாளையம் என்ற இடத்தில் மடக்கி பிடித்தார். பின்னர் வேனிலிருந்து ஓட்டுனரை இறங்கச் செய்தபோது, அவர் குடிபோதையில் நிதானம் இன்றி இருப்பது தெரிய வந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் அங்கிருந்த பொது மக்களிடம் இது குறித்து தெரிவித்தார். அவர்கள் பல்லடம் போலீசாருக்கு தகவல் அளித்தனர். இதையடுத்து சம்பவ இடம் வந்த போலீசார் குடிபோதையில் வாகனம் ஓட்டிய ஓட்டுநரை கைது செய்து போலீஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். வேறு வாகனம் வரவழைக்கப்பட்டு குழந்தைகள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். குடிபோதையில் வாகனம் ஓட்டியதால் குழந்தைகளின் பெற்றோர்கள் அதிர்ச்சி அடைந்து இது குறித்து பள்ளி நிர்வாகத்திடம் முறையிட்டனர், அதிர்ஷ்டவசமாக சிறிய விபத்தினால் பள்ளி வேனில் இருந்த குழந்தைகள் உயிர் தப்பினர். இதுவே குடிபோதை ஓட்டுனரால் பெரிய விபத்து ஏற்பட்டு இருந்தால், வேனில் இருந்த 15 குழந்தைகளின் நிலை என்னவாக இருக்கும் என அதிர்ச்சியுடன் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

# 6,418 மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ்




வேலூர், செப். 9
வேலூர் மாவட்டத்தில் 2ம் கட்டமாக 31 பள்ளிகளைச் சேர்ந்த 6,418 மாணவர்களுக்கான இலவச பஸ் பாஸ் வழங்கப்பட்டுள்ளதாக அரசு போக்குவரத்துக் கழக (விழுப்புரம் கோட்டம்) வேலூர் மண்டல பொதுமேலாளர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: அரசு போக்குவரத்துக் கழகத்தின் வேலூர் மண்டலத்தின் வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகியமாவட்டங்களில் உள்ள 620 அரசு, தனியார் பள்ளிகள், அரசு கலைக் கல்லூரிகள், அரசு பாலிடெக்னிக், அரசு ஐ.டி.ஐ. ஆகியவற்றில் படிக்கும் மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகிறது. இதுவரை பெறப்பட்ட விண்ணப்பங்கள் அடிப்படையில் 2ம் கட்டமாக 31 பள்ளிகளுக்கு பூர்த்தி செய்யப்பட்ட 6,418 பஸ் பாஸ் பெறப்பட்டு, சம்ப ந்தப்பட்ட பள்ளிகளுக்கு வழங்கி, மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# காங்கிரஸ் கட்சியினர் நடைபயணம்




ஆரணி, செப். 9
ஆரணி டவுன் காமராஜர் சிலை அருகே தேசிய காங்கிரஸ் கட்சியினர் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியின் ஒற்றுமை பயணத்தின் ஓராண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு நடைபயணம் நகர தலைவர் பொ ன் னை யன் த லை மை யி ல் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக மாவட்ட காங்கிரஸ் தலைவர் தவணி அண்ணாமலை பங்கேற்றார்.

மேலும் நடைபயணம் காமராஜர்சிலைதொடங்கி பழைய பஸ் நிலையம் மார்க்கெட் வீதி மண்டி தெரு வழியாக காந்தி சிலையில் முடிந்தன. பின்னர் நடை பயன பேரணியில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியின் நடை பயன சா த னை க ள் எடுத்துரைத்தும் மத்திய அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர். இதில் மாவட்ட பஞ்சாயத்து ராஜ் தலைவர் செல்வம் நகர நிர்வாகிகள் உதயகுமார் பிள்ளையார் குருமூர்த்தி, சம்பந்தம், நகர இளைஞர் காங்கிரஸ் தலைவர் பிரபு மற்றும் 50 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

# பல்லடம் செட்டிபாளையம் சாலையில் மதுபான கடை அமைக்க எதிர்ப்பு தெரிவித்து தாசில்தாரிடம் மனு



பல்லடம், செப். 9
அந்த பகுதி பொதுமக்கள் கடந்த 10 ஆண்டுகளாக போராட்டம் நடத்தி வந்தனர். மதுபான கடையால் பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுகிறது.

பல்லடம் செட்டிபாளையம் ரோடு பிரிவில் அரசு மதுபான கடை எண் 1830 செயல்பட்டு வருகிறது. இந்த மதுபான கடையால் பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுவதால், அந்தக் கடையை அங்கிருந்து இடமாற்றம் செய்யவேண்டும் என சமூக ஆர்வலர்கள் கூட்டமைப்பு மற்றும் அந்த பகுதி பொதுமக்கள் கடந்த 10 ஆண்டுகளாக போராட்டம் நடத்தி வந்தனர். இந்த நிலையில் பல்லடம் தாசில்தார் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுவதாக கூறி மதுபான கடையை மூட உத்தரவிட்டுள்ளார். இந்த நிலையில் மதுபான கடையை அங்கிருந்து சுமார் அரை கிலோ மீட்டர் தூரம் தள்ளி அதே பல்லடம் செட்டிபாளையம் ரோட்டில் அமைக்க, இடம் ஆய்வு செய்யப்பட்டது. இதனை அறிந்த அப்பகுதி மக்கள் நேற்று பல்லடம் தாலுக்கா அலுவலகத்தில், அந்தப் பகுதியில் மீண்டும் மதுபான கடை அமைக்க கூடாது. அதனால் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் என எதிர்ப்பு தெரிவித்து மனு அளித்துள்ளனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# பாரத் சி.பி.எஸ்.இ. பள்ளியில் ஆசிரியர் தின விழா

கிருஷ்ணகிரி, செப். 9
கிருஷ்ணகிரி பாரத் இன்டர்நேஷனல் சீனியர் செகண்டரி பள்ளியில் ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவிற்கு கிருஷ்ணவேணி மணி குத்துவிளக்கு ஏற்றி விழாவை தொடங்கி வைத்தார். பள்ளியின் நிறுவனர் மணி விழாவிற்கு தலைமை தாங்கி, அனைத்து ஆசிரியர்களுக்கும் நினைவு பரிசுகளை வழங்கி பேசினார். அவர் பேசும் போது டாக்டர் ர ா த ா கி ரு ஷ் ண னின் வாழ்க்கை வரலாறு குறித்தும், அவர் ஆசிரியராக தனதுபணியைதொடங்கி, பிறகு இந்திய குடியரசு தலைவராக உயர்ந்தது குறித்தும் விளக்கினார். அதை போல எதிர்கால சமுதாயத்திற்கு ஆசிரியர்கள், மாணவர்களுக்கு செய்ய வேண்டிய சேவை, தன்னம்பிக்கை மற்றும் விடா முயற்சியுடன் களப்பணி யாற்றிட வேண்டும் என்று கூறினார். விழாவையொட்டி ஆசிரி யர்கள், ஆ சி ரி யை க ளு க் க ா ன விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் வெற்றி பெற்ற ஆசிரிய, ஆசிரியைகளுக்கு பள்ளியின் நிறுவனர் மணி பரிசுகளை வழங்கி பாராட்டினார். விழாவில் குழந்தைகள் நல மருத்துவர் டாக்டர் சந்தோஷ், ஆசிரியர்களை பாராட்டி சிறப்புரையாற்றினார். இந்த விழாவின் முடிவில் முதல்வர் ஹரிநாத் நன்றி கூறினார். விழாவிற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் மாதேஷ் மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள் செய்திருந்தனர்.

# சிறுவாபுரி பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் 108 சங்காபிஷேக விழா

பெரியபாளையம், செப். 9

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி அருகே சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரி கிராமத்தில் புகழ்பெற்ற அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது. இந்துசமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இக்கோவில் உள்ளது. இந்நிலையில், இக்கோவிலில் உள்ள மூலவர், விநாயகர், ஆதிமூலவர், அண்ணாமலையார், உண்ணாமலை அம்மன் உள்ளிட்ட சந்நிதிகள் புதுப்பிக்கப்பட்டு கருங்கல் தரைதளம் அமைத்து, பக்தர்கள் விரைவாக தரிசனம் செய்ய எஸ்.எஸ்.கியூலைன் அமைத்தல் உள்ளிட்ட திருப்பணிகள் ரூ.1.25 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டு கடந்த 2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் தேதி



மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, மண்டல அபிஷேக விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிலையில், கும்பாபிஷேகம் நடைபெற்று ஆங்கில நாள் காட்டியின்படி ஒரு வருடம் நிறைவு பெற்றது. எனவே கடந்த ஆகஸ்ட் மாதம் 21ம் தேதி இக்கோவிலில் வருடாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது. இந்நிலையில், இக்கோவிலில் மிருகசீரிஷம் நட்சத்திரத் தின்படி கும்பாபிஷேகம் நடைபெற்று ஓராண்டு ஆகிறது. இதை முன்னிட்டு இன்று விநாயகர், ஆதிமூலவர், அண்ணாமலையார், உண்ணாமலை அம்மன் உள்ளிட்ட பரிவார மூர்த்திகளுக்கு மகா அபிஷேகம் ஆனந்தன் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கோவில் வளாகத்தில் அருங்கோணத்தில் 108 சங்குகள் அலங்கரிக்கப்பட்டு, நவகலசம் ஸ்தாபனம் செய்யப்பட்டு 108 திரவியங்கள் மூலம் ஹோமம் வளர்க்கப்பட்டது. மதியம் மகா பூர்ணாகுதி நடந்து. பின்னர், நவக்கலசதீர்த்தங்கள், 108 சங்கு தீர்த்தங்கள் மங்கள வாத்திய முழங்க பிரகார புறப்பாடு நடைபெற்றது. பின்னர், மூலவருக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. இதன் பின்னர், மூலவருக்கு புஷ்பராஜா அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை நடைபெற்றது. பின்னர், புஷ்ப அலங்காரத்தில் உற்சவர் பிரகார புறப்பாடு நடைபெற்றது. பின்னர், கோவில் வளாகத்தில் அனைத்து பக்தர்களுக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், திரைப்பட பாடலாசிரியரும், நடிகருமான பா.விஜய் தனது குடும்பத்துடன் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோவிலின் செயல் அலுவலர் செந்தில் குமார் தலைமையில் திருக்கோவில் பணியாளர்களும், ஊழியர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

# கல்வியும், விளையாட்டும் மாணவ மாணவிகளுக்கு அவசியம் தூத்துக்குடியில் நடந்த விழாவில் அமைச்சர் கீதாஜீவன் பேச்சு

தூத்துக்குடி, செப். 9

தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறை சார்பில் தூத்துக்குடியில் உள்ள கீதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஒருங்கிணைத்த தூத்துக்குடி புறநகர் குறுவட்ட அளவிலான மாணவ, மாணவிகளுக்கான தடகள போட்டி தருவை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.



இதில் வெற்றி பெற்றவர்களுக்கு தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூகநலன் மற்றும் பெண்கள் உரிமைத்துறை அமைச்சருமான கீதாஜீவன் பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கி பேசியதாவது: தமிழ்நாட்டில் எல்லா துறைகளும் முன்னேற்றம் அடைந்து இந்தியாவிற்கு தமிழ்நாடு முதன்மை மாநிலமாக இருக்க வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையோடு திட்டங்கள் வகுக்கப்பட்டு முறையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதே போல் கல்வித்துறைக்கு அதிகநிதி ஒதுக்கிடு செய்யப்பட்டு கல்வியின் தரத்தை உயர்த்தி மாணவ, மாணவிகளின் அறிவுத்திறனை வளர்க்கும் வகையில் தமிழக பள்ளி கல்வித்துறை செயல்படுகிறது. அதே போல் உடல் ஆரோக்கியத்திற்கு விளை யாட்டும் அவசியம் என்பதை உணர்ந்து விளை யாட்டுத் துறையை மேம்படுத்தி உலகளவில் தமிழக வீரர்களை உருவாக்கும் வகையில் பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு அதில் பங்கு பெறுபவர்களையும் அரசு ஊக்குவித்து வருகிறது. எனவே இதில் கலந்து கொண்டுள்ள மாணவ, மாணவிகளுக்கு கல்வியும் அவசியம் விளையாட்டும் முக்கியம் என்பதை உணர்ந்து அதில் சாதனைகள் புரிந்து தமிழகத்திற்கும், தமிழக அரசிற்கும் பெருமையை சேர்க்கும் வகையில் நீங்கள் முன் உதாரணமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் மாவட்ட விளையாட்டுதுறை அலுவலர் அந்தோணி அதிஷ்டராஜ், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் கண்ணதாசன், கீதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி செயலாளர் ஜீவன்ஜேக்கப், தலைமை ஆசிரியர் சித்ரா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 76 அடியாக சரிந்தது

ஈரோடு, செப். 9

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி உள்ளது.



கடந்த சில நாட்களாக அணைக்கு நீர் வரத்தை காட்டிலும் பாசனத்திற்காக அதிக அளவில் நீர் திறந்து விடப்பட்டு வருவதால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது. அதே நேரம் மழை பொழிவு இல்லாததால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. ]

இன்று காலை நிலவரப்படி பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 76.94 அடியாக உள்ளது. அணைக்கு வினாடி 354 கனஅடி தண்ணீர் மட்டுமே வருகிறது.

அணையில் இருந்து கீழ் பவானி வாய்க்கால் பாசனத்திற்காக 2,100 கன அடி, காளிங்கராயன் பாசனத்திற்கு 500 கனஅடி, குடிநீருக்காக பவானி ஆற்றுக்கு 100 கனஅடி என மொத்தம் பவானிசாகர் அணையில் இருந்து 2,700 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதேபோல் குண்டேரிப்பள்ளம் அணையின் நீர்மட்டம் இன்றுகாலைநிலவரப்படி 24.89கனஅடியும், பெரும்பள்ளம் அணையின் நீர் மட்டம் 14.92 கனஅடியும், வரட்டு பள்ளம் அணையின் நீர்மட்டம் 21.33 கனஅடியாக உள்ளது.

# கடலூர் மத்திய சிறையில் பிரபல ரவுடி எண்ணூர் தனசேகரனின் அறையில் மீண்டும் செல்போன் பறிமுதல்

கடலூர்ம் செப்.9

: கடலூர் கேப்பர் மலையில் மத்திய சிறைச்சாலை உள்ளது. இந்த சிறைச்சாலையில் 100க்கும் மேற்பட்ட தண்டனை கைதிகள், விசாரணை கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இதனால் இந்த சிறைச்சாலையில் 24 மணி நேரமும் சிறைக்காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். சென்னையில் பல்வேறு வழக்குகளில் தொடர்புடைய பிரபல ரவுடி எண்ணூர் தனசேகரன் கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு அவரது அறையில் உதவி ஜெயிலர் மணிகண்டன் திடீரென சோதனை நடத்த சென்றார்.


அப்போது அவரை எண்ணூர் தனசேகரன் தாக்க முயன்றார். மேலும் ஜெயிலர் மணிகண்டன் வீட்டில் பெட்ரோல் பாட்டில்களை வீசி கொலை முயற்சி நடந்தது. இந்த வழக்கிலும் எண்ணூர் தனசேகரனுக்கு தொடர்பு உள்ளது. எனவே அவர் தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு எண்ணூர் தனசேகரன் அறையை சிறைக்காவலர்கள் சோதனை செய்தபோது செல்போனை பறிமுதல் செய்தனர்.

இதனையடுத்து அளவுக்கு அதிகமாக மாத்திரைகளை சாப்பிட்டு எண்ணூர் தனசேகரன் தற்கொலை செய்ய முயற்சி செய்தார். இதனால் எண்ணூர் தனசேகரனை சிறைக்காவலர்கள் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். நேற்று தனசேகரன் மீது உள்ள வழக்கு சம்பந்தமாக சென்னை பொன்னேரி நீதிமன்றத்தில் போலீசாரால் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் மாலை கடலூர் மத்திய சிறையில் அடைத்தனர். அப்போது சிறைக்காவலர்கள் எண்ணூர் தனசேகரன் அறையை மீண்டும் சோதனை செய்தனர். சோதனையில் அவரது அறையில் செல்போன் மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. உடனே சிறைக்காவலர்கள் அந்த செல்போனை பறிமுதல் செய்தனர். இதுகுறித்து சிறைக்காவலர்கள் கடலூர் முதுநகர் போலீஸ் நிலையத்தில் புகார் தெரிவித்தனர். எண்ணூர் தனசேகரன் இருந்த அறையிலிருந்து மீண்டும் சிறைக்காவலர்கள் செல்போன் பறிமுதல் செய்தது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மத்திய அரசின் ஸ்வநிதி திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் முகாம்

கோவை, செப். 9

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் சார்பில் பிரதமரின் ஸ்வநிதி என்ற திட்டத்தின் கீழ் சிறு வியாபாரிகள் மற்றும் சாலையோர வியாபாரிகளுக்கு மூலதனக் கடன் வழங்கும் முகாம் கோவை மாநகராட்சி அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.



முகாமினை கோவை மாநகராட்சி மேயர் கல்பனா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் பிரதாப், பொதுசுகாதாரக்குழு தலைவர் மாரிச்செல்வன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்த முகாமில் கடன் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பயனாளிகளுக்கு வழ ங்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாநகர நல அலுவலர் தாமோதரன், மாநகராட்சி சாலையோர வியாபாரிகள் திட்ட ஒருங்கிணைப்பாளர் பாலசுந்தரம் மற்றும் சாலையோர வியாபாரிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# வாடகை செலுத்தாத 3 கடைகளுக்கு 'சீல்'

சீர்காழி, செப். 9

நகராட்சிக்கு சொந்தமான சுமார் 80க்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன. வாடகை செலுத்தாத 3 கடைகளை பூட்டி நகராட்சி ஊழியர்கள் சீல் வைத்தனர்.



சீர்காழி நகராட்சிக்கு உட்பட்ட புதிய பேருந்து நிலையம் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான சுமார் 80க்கும் மேற்பட்ட கடைகள் உள்ளது. இவற்றில் பல மாதங்களாக வாடகை செலுத்தாத கடை களில் நகராட்சி ஆணையர்ஹேமலதா, நகராட்சி அலுவலர்களுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டார்

அப்போது நகராட்சிக்கு வாடகை செலுத்தாத மூன்று கடைகளை பூட்டி நகராட்சி ஊழியர்கள் சீல் வைத்தனர். நகராட்சி மேலாளர் (பொறுப்பு) ரமேஷ், இளநிலை உதவியாளர்கள் ராஜகணேஷ், மதுபாலா, ராஜரத்தினம், வருவாய் உதவியாளர் ரவி அலுவலக உதவியாளர் ஜானகிராமன் உடன் இருந்தனர்.

# குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் குறித்து ஆலோசனை

கரூர், செப். 9

கரூர் தோகைமலையில் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் சமூக பாதுகாப்பு திட்டத்தின் ஒன்றிய அளவிலான ஆலோசனை குழுக்கூட்டம் நடைபெற்றது. இதற்கு தோகைமலை ஒன்றியக்குழு தலைவர் சுகந்தி சசிகுமார் தலைமை தாங்கினார். ஒன்றிய ஆணையர்ராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

ஆதரவற்ற குழந்தைகளை கண்டறிந்து, அவர்களுக்கு தரமான கல்வி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும், பாலியல் தொந்தரவுகள் மற்றும் பாதுகாப்பு இல்லாத குழந்தைகளை கண்டறிந்து அவர்களுக்கு பாதுகாப்பு வசதிகளை அமைத்து கொடுக்க வேண்டும்,

குழந்தைகளை பராமரிக்க முடியாத குடும்பங்களை அறிந்து அவர்களுக்கு தமிழ்நாடு அரசு திட்டங்களை எடுத்துக்கூறி வழிகாட்ட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. இதேபோல் இளந்தளிர் இல்லம் என்ற திட்டம் மூலம் குழந்தை திருமணத்தை முற்றிலும் தடுப்பதற்கும் பல்வேறு கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டது.

# அரியலூர் அரசு கலைக் கல்லூரியில் கலந்தாய்வு

அரியலூர், செப். 9

அரியலூர் அரசு கலைக் கல்லூரியில் கலந்தாய்வு நடைபெற உள்ளது 11 ந் தேதி நடைபெறுகிறது.

அரியலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 20232024 ஆம் கல்வியாண்டின் முதுகலை மற்றும் முதுநிலை முதலாமாண்டு மாணவர்களுக்கான கலந்தாய்வு வரும் 11 ந் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து அக்கல்லூரி முதல்வர்ஜோ.டோமினிக் அமல்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில், எம்.ஏ., தமிழ், ஆங்கிலம், வரலாறு, பொருளியல், எம்.காம் எம்.எஸ்சி., கணிதம் இயற்பியல் வேதியியல், தாவரவியல், விலங்கியல், கணினி அறிவியல், சுற்றுச்சூழல் அறிவியல் ஆகிய பாடப்பிரிவுகளுக்கு கலந்தாய்வுக்கு வரும் மாணவ, மாணவியர் தங்களுடைய மாற்றுச் சான்றிதழ், மதிப்பெண் பட்டியல், வகுப்புச் சான்றிதழ், ஆதார்அட்டை நகல், அசல் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றைக் கொண்டு வரவேண்டும். மேற்கண்ட பாடங்களில் சேரும் மாணவர்களுக்கு 13ந் தேதி முதல் முதல் வகுப்புகள் நடைபெறும்

# ரத்ததான முகாம்

மதுரை, செப். 9

மதுரை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டமும், ஜே.சி.ஐ. மதுரை லயன்ஸ் இணைந்து ஒரு நாள் ரத்ததான முகாமை இன்று நடத்தியது. கல்லூரி செயலாளர் விஜயராகவன் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் ராமசுப்பையா வாழ்த்துரைவழங்கினார். சுயநிதி பிரிவு இயக்குநர் பிரபு சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார். காசிநாத துரை வரவேற்று பேசினார்.

சிறப்பு விருந்தினராக ஜே.சி.ஐ. முன்னாள் தலைவர் ராஜலிங்கம், காமராஜர் பல்கலைகழக என்.எஸ்.எஸ். ஒருங்கிணைப்பாளர் பாண்டி ஆகியோர் கலந்து கொண்டனர். முகாமில் 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு ரத்த



தானம் செய்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை என்.எஸ்.எஸ். ஒருங்கிணைப்பா ளர்கள் சிலம்பரசன், வெங்கடேஷ் பாரதி, பெரியகருப்பன், திருஞான சம்பந்தம், மற்றும் வெங்க டேஷ நரசிம்ம பாண்டியன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# காந்திகிராம பல்கலைக்கழக வேளாண் அறிவியல் மையத்துக்கு விருது

சின்னாளப்பட்டி, செப். 9

விவசாயிகளின் வருானத்தை உயர்த்தவும் செயல்விளக்கம், ஆலோசனைகளை இந்த மையம் வழங்கி வருகிறது.

திண்டுக்கல் மாவட்டம் காந்திகிராம பல்கலைக்கழகத்தின் வேளாண் அறிவியல் மைத்துக்கு செயல்பாடுகளின் அடிப்படையில் மண்டல அளவில் 2ம் இடத்துக்கான விருது வழங்கப்பட்டது.

ஆந்திரா, தெலுங்கானா, தமிழகம், புதுச்சேரி, யூனியன் பிரதேசத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் மையங்களை ஐதராபாத்தில் உள்ள வேளாண் தொழில்நுட்ப ஆராய்ச்சி பண்பாட்டு நிறுவனம் கண்காணித்து வருகிறது. இந்நிறுவனமும் தமிழ்நாடு வேளாண் பல்கலையும் இணைந்து வேளாண் அறிவியல் மைய செயல்பாடு கள் குறித்து ஆய்வு கூட்டத்தை கோவையில் நடத்தின.

இதில் காந்திகிராம பல்கலையும், வேளாண் அறிவியல் மையத்துக்கு மண்டல அளவில் 2ம் இடம் கிடைத்துள்ளது. விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருானத்தை உயர்த்தவும் செயல்விளக்கம், ஆலோசனைகளை இந்த மையம் வழங்கி வருகிறது. மையத்தின் செயல்பா டுகள், விவசாயிகளின் வெற்றி கதைகளை ஆவணப்படுத்துதல், சுழல் நிதி உற்பத்தி போன்ற வற்றுக்காக இந்த வருது வழங்கப்பட்டது. வேளாண் பல்கலைக்கழக துணை வேந்தர் கீதாலெட்சுமி இதற்கான விருதினை வழங்கினார். வேளாண் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் வெங்கட சுப்பிர மணியன், வேளாண் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குனர் முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# விஷக்கதண்டு அகற்றம்

நாமக்கல், செப். 9

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுக்கா வெங்கரைபேரூராட்சிக்கு உட்பட்ட குச்சிபாளையம் பகுதியில் உள்ள ஒரு தென்னை மரத்தில் ஆயிரக்கணக்கான விஷக்கதண்டுகள் கூடு கட்டி இருந்தது. தீயணைப்பு வீரர்கள் சம்பந்தப்பட்ட பகுதிக்கு விரைந்து சென்று தென்னை மரத்தில் கூடு கட்டி இருந்த விஷக்கதண்டுகளை தண்ணீரை பீச்சி அடித்து அகற்றினர்.

நாமக்கல்மாவட்டம் பரமத்திவேலூர் தாலுக்கா வெங்கரைபேரூராட்சிக்கு உட்பட்ட குச்சிபாளையம் பகுதியில் உள்ள ஒரு தென்னை மரத்தில் ஆயிரக்கணக்கான விஷக்கதண்டுகள்கூடுகட்டி இருந்தது. இந்நிலையில் அந்த வழியாக செல்பவர்களை விஷக்கதண்டுகள் தீண்டி அச்சுறுத்தி வந்தது. இது குறித்து அப்பகுதியை சேர்ந்தவர்கள் வேலாயுதம்பாளையம்தீயணைப்பு துறையினரிடம் புகார் மனு கொடுத்து விஷக்கதண்டுகளை அகற்றிதருமாறு கோரிக்கை விடுத்தனர். அதன் அடிப்படையில் நிலைய அலுவலர் சரவணன் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள் சம்பந்தப்பட்ட பகுதிக்கு விரைந்து சென்று தென்னை மரத்தில் கூடு கட்டி இருந்த விஷக்கதண்டுகளை தண்ணீரை பீச்சி அடித்து அகற்றினர். இதனால் அப்பகுதி பொதுமக்கள் நிம்மதி அடைந்தனர்



# ஆரம்பிக்கலாமா..? அடுத்த படத்திற்கு வெறித்தனமாக ரெடியாகும் கமல்



நடிகர் கமல், தற்போது ஷங்கர் இயக்கத்தில் இந்தியன்2 படத்தில் நடித்து வருகிறார். இதில் கமலுடன் இணைந்து சமுத்திரக்கனி, பாபி சிம்கா, காஜல் அகர்வால், சித்தார்த், ராகுல் பிரீத் சிங், பிரியா பவானி சங்கர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதைத்தொடர்ந்து கமல்ஹாசனின் 233வது படத்தை 'நேர்கொண்ட பார்வை', 'வலிமை', 'துணிவு' போன்ற படங்களை இயக்கிய எச். வினோத், இயக்கவுள்ளதாக படக்குழு அறிவித்தது. இப்படம் முழுக்க முழுக்க சமூக அக்கறைக் கொண்ட அரசியல் படமாக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, எச். வினோத் இயக்கும் படத்திற்காக நடிகர் கமல்ஹாசன் துப்பாக்கி பயிற்சியுடன் வெறித்தனமாக தயாராகுகிறார். இது தொடர்பான வீடியோவை படக்குழு சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளது.



# ஜவான் முதல் நாள் வசூல் எத்தனை கோடி தெரியுமா?

ஷாருக்கான் நடிப்பில் வெளியான திரைப்படம் 'ஜவான்'. 'ஜவான்' திரைப்படம் திரையரங்குகளில் வெளியானது. தமிழ் திரையுலகில் முன்னணி இயக்குனராக வலம் வரும் அட்லீ இயக்கத்தில் உருவான திரைப்படம் 'ஜவான்'. இதில் ஷாருக்கான் கதாநாயகனாக நடித்துள்ளார். நயன்தாரா கதாநாயகியாக நடித்துள்ள இப்படத்தில் விஜய் சேதுபதி வில்லன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் யோகிபாபு, தீபிகா படுகோனே, பிரியாமணி உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர். பான் இந்தியா படமாக உருவாகியுள்ள 'ஜவான்' நேற்று (செப்டம்பர் 7) ஆயிரத்திற்கும் மேற்பட்ட திரையரங்குகளில் ரசிகர்களின் கொண்டாட்டத்துடன் வெளியானது. இந்நிலையில், இப்படத்தின் வசூல் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, 'ஜவான்' திரைப்படம் முதல் நாளில் ரூ.150 கோடிக்கு மேல் வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

# இந்தியா என்ற பெயரே எனக்கு போதுமானதாக இருக்கிறது வெற்றிமாறன்



தனுஷ் நடிப்பில் 2007ம் ஆண்டு வெளியான பொல்லாதவன் படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு இயக்குனராக அறிமுகமானவர் வெற்றிமாறன். அதன்பின்னர் ஆடுகளம், விசாரணை, வடசென்னை, அசூரன், விடுதலை உள்ளிட்ட படங்களை இயக்கி ரசிகர்களை கவர்ந்தார். இவர் தற்போது சூரியின் விடுதலை2 படத்திலும் சூர்யாவின் வாடிவாசல் பட பணிகளிலும் தீவிரம் காட்டி வருகிறார். இந்நிலையில், இந்தியா என்ற பெயரே போதுமானது என்று வெற்றிமாறன் கூறியுள்ளார். அவர் பேசியதாவது, "இந்தியா என்ற பெயரே எனக்கு போதுமானதாக இருக்கிறது. தேசிய விருதுகள் குறித்து எனக்கு வேறு விதமான கருத்து இருக்கிறது. நாம் ஒரு படத்தை தேர்வுக்கு அனுப்பும் போது தேர்வுக்குழுவின் முடிவுக்கு கட்டுப்படுகிறேன் என்ற ஒப்புதலுடன் தான் அனுப்புகிறோம்.

அந்த தேர்வு குழு சிறந்த தேர்வு குழுவா? இல்லையா? சரியாக தேர்ந்தெடுக்கிறார்களா? என்பது அடுத்தக் கட்டம். நான் ஒரு படத்தை அனுப்புகிறேன் என்றால் இந்த தேர்வுக்குழுவின் தீர்ப்பு இறுதியானது என்று ஏற்றுக் கொண்டுதான் அனுப்புகிறோம். பிறகு அந்த படத்திற்கான விருது கிடைக்கிறது இல்லை என்பது அந்த தேர்வுக்குழுவின் முடிவு. ஒரு தேர்வுக்குழுவின் முடிவு நிச்சயமாக ஒரு படத்தின் தரத்தை, அந்த படத்தின் சமூக பங்களிப்பை தீர்மானிப்பது இல்லை. 'ஜெய்பீம்' படம் என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் தொடங்கினார்களோ அதை அந்த படம் செய்துவிட்டது" என்று பேசினார்.

# புதிய வீடியோ வெளியிட்ட 'ஜெயிலர்' படக்குழு



இயக்குனர் நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடிப்பில் ஆகஸ்ட் 10 ஆம்தேதி வெளியான திரைப்படம் 'ஜெயிலர்'. இந்த படத்தில் மலையாள நடிகர் மோகன்லால், கன்னட நடிகர் சிவராஜ்குமார், ரம்யா கிருஷ்ணன், யோகிபாபு, வசந்த் ரவி, விநாயகன் உள்ளிட்ட திரைப்பிரபலங்கள் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளதால் ரசிகர்கள் இப்படத்தை திரையரங்குகளில் கொண்டாடினர். இப்படத்திற்கு அரசியல் தலைவர்கள், திரைப்பிரபலங்கள் என பலர் வாழ்த்து தெரிவித்தனர். மேலும், இப்படம் ரூ.525 கோடிக்கு மேல் வசூல் குவித்தது.

'ஜெயிலர்' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து தயாரிப்பாளர் கலாநிதி மாறன் ரஜினி, நெல்சன் மற்றும் அனிருத்திற்கு கார் மற்றும் காசோலைகளை பரிசாக வழங்கினார். இந்நிலையில், 'ஜெயிலர்' படத்தில் இடம்பெற்றிருந்த 'நரசிம்மா' தீம் மியூசிக் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

இந்த வீடியோவை ரசிகர்கள் வைரலாக்கி வருகின்றனர்.

# மகள் தயாரிக்கும் வெப்தொடரை தொடங்கி வைத்த ரஜினி




நடிகர் ரஜினியின் இரண்டாவது மகள் சவுந்தர்யா ரஜினிகாந்த். இவர் கோச்சடையான்', தனுஷின் 'வேலையில்லா பட்டதாரி 2' போன்ற படங்களை இயக்கி பிரபலமானார். நீண்ட இடைவெளிக்கு பிறகு தற்போது மீண்டும் சினிமாவிற்கு திரும்பியுள்ள சவுந்தர்யா, அமேசான் பிரைம் ஓடிடி தளத்துடன் இணைந்து 'கேங்க்ஸ்' என்ற புதிய வெப் தொடர் ஒன்றை தயாரிக்கிறார். நோவா ஆபிரஹாம் இயக்கும் இந்த வெப்தொடரில் நடிகர் அசோக் செல்வன் கதாநாயகனாக நடிக்கிறார். 'கேங்க்ஸ்' வெப்தொடரின் பூஜை சென்னையில் நடைபெற்றது. இதன் படப்பிடிப்பை நடிகர் ரஜினிகாந்த் கிளாப் போர்ட் அடித்து தொடங்கி வைத்துள்ளார். இது தொடர்பான புகைப்படத்தை சவுந்தர்யா தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்புடன் கோல்ஃப் விளையாடிய மகேந்திர சிங் தோனி




அழைப்பின் பேரில் எம்.எஸ். டோனி டிரம்ப் உடன் கோல்ஃப் விளையாட சென்றதாக தகவல். முன்னதாக அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியை எம்.எஸ். டோனி நேரில் கண்டுகளித்தார்.

இந்திய கிரிக்கெட் அணி முன்னாள் கேப்டனும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கேப்டனுமான எம்.எஸ். டோனி அமெரிக்கா முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் உடன் கோல்ஃப் விளையாடும் வீடியோ சமூக வலைத்தளங்களில் பகிரப்படுகிறது.

டொனால்ட் டிரம்ப் அழைப்பு விடுத்ததன் பேரில் எம்.எஸ். டோனி கோல்ஃப் விளையாட சென்றதாக கூறப்படுகிறது. அதன்படி இருவரும் கோல்ஃப் விளையாடும் காட்சிகள் அடங்கிய வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரல் ஆகி வருகிறது. முன்னதாக கார்லோஸ் அல்காராஸ் மற்றும் அலெக்சாண்டர் வெரவ் இடையே நடைபெற்ற அமெரிக்க ஓபன் டென்னிஸ் காலிறுதிச் சுற்று போட்டியை எம்.எஸ். டோனி நேரில் கண்டுகளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான வீடியோ வைரல் ஆனதும் குறிப்பிடத்தக்கது. எம்.எஸ். டோனி மற்றும் டொனால்ட் டிரம்ப் கோல்ஃப் விளையாடிய போது எடுக்கப்பட்ட புகைப்படத்தை எம்.எஸ். டோனியின் நண்பர் ஹிதேஷ் சங்வி பகிர்ந்து இருக்கிறார்.



# தூணாக நின்று போராடிய லபுசேன் 3 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா அபார வெற்றி

தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டி20 மற்றும் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர்களில் விளையாடுகிறது. இவ்விரு அணிகளுக்கு இடையே நடந்த டி20 தொடரை ஆஸ்திரேலிய அணி 30 என முழுமையாக கைப்பற்றி தென் ஆப்பிரிக்காவை ஒயிட்வாஷ் செய்தது. இந்நிலையில், இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி இன்று நடைபெற்றது. டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய தென் ஆப்பிரிக்கா 49 ஒவரில் 222 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. கேப்டன் பவுமா 142 பந்தில் 114 ரன்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் சொற்ப ரன்களில் வெளியேறினர். மார்கோ ஜான்சன் 32 ரன்கள் எடுத்தார். ஆஸ்திரேலியா சார்பில் ஹேசில்வுட் 3 விக்கெட்டும், ஸ்டோய்னிஸ் 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 223 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலியா களமிறங்கியது. முன்னணி வீரர்கள் விரைவில் வெளியேறினர். டிராவிஸ் ஹெட் 33 ரன்கள் எடுத்தார். ஆஸ்திரேலிய அணி 113 ரன்கள் எடுப்பதற்குள் 7 விக்கெட்களை இழந்து தடுமாறியது. 8வது விக்கெட்டுக்கு மார்னஸ் லபுசேன், ஆஷ்டன் அகார் ஜோடி சேர்ந்தனர். தனி ஆளாகப் போராடிய லபுசேன் அரை சதம் பதிவு செய்தார். தொடர்ந்து ரன்கள் குவித்த இந்த ஜோடி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றது. இறுதியில், ஆஸ்திரேலியா 40.2 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 225 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. லபுசேன் 80 ரன்னும், ஆஷ்டன் அகார் 48 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். தென் ஆப்பிரிக்கா சார்பில் ரபாடா, கோட்சி ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 10 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா அணி முன்னிலை பெற்றுள்ளது.

# உலக கோப்பைக்கான இந்திய அணி தேர்வு: வெளிநாட்டு நிபுணர்கள் எங்களுக்கு அறிவுரை வழங்க தேவையில்லை கவாஸ்கர்



அவர்களை பொறுத்தவரை எப்போதும் நம்மை விட அவர்கள் சிறந்தவர்கள் என்பதுதான் அவர்களது வழி. உங்களது அறிவுரை எங்களுக்கு தேவையில்லை.

இந்தியாவில் நடைபெற உள்ள 50 ஓவர் உலக கோப்பைக்கான இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இந்த அணி தொடர்பாக பல முன்னாள் வீரர்கள் கருத்துக்களை தெரிவித்து வருகிறார்கள். பாகிஸ்தான், ஆஸ்திரேலியாவை சேர்ந்த கிரிக்கெட் நிபுணர்கள், முன்னாள் வீரர்கள் இந்திய அணி குறித்து கருத்துக்களை தெரிவித்தனர்.

இதற்கு இந்திய அணி முன்னாள் கேப்டன் சுனில் கவாஸ்கர் கண்டனம் தெரிவித்துள்ளார். வெளிநாட்டு நிபுணர்களின் அறிவுரை எங்களுக்கு தேவையில்லை என்று காட்டமாக கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறும்போது, அவர்கள் (வெளிநாட்டு நிபுணர்கள்) தரப்பில் இருந்து வெளிவரும் அறிக்கைகளை பார்த்தால் துரதிர்ஷ்டவசமாக இருக்கிறது. இந்திய அணியில் ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் வீரர்களையா தேர்வு செய்கிறோம்? இது எப்படி அவர்களது கவலையாக இருக்கும்.

இந்திய வீரர்கள் யாராவது ஆஸ்திரேலியா அல்லது பாகிஸ்தான் அணியில் தேர்வு செய்கிறார்களா? அது எங்களது வேலை இல்லை. கோலி, ரோகித் சர்மாவை விட பாபர் ஆசம் சிறந்தவர் என்று கூறுவார்கள்.

ஷாகின் ஷா அப்ரிடி சிறந்தவர், தெண்டுல்கரைவிட இன்சமாம்உல்ஹக் சிறந்தவர் என்று கூறினார்கள். அவர்களை பொறுத்தவரை எப்போதும் நம்மை விட அவர்கள் சிறந்தவர்கள் என்பதுதான் அவர்களது வழி.

யார் 3வது மற்றும் 4வது வரிசையில் பேட்டிங் செய்ய வேண்டும் என்று வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள். உங்களது அறிவுரை எங்களுக்கு தேவையில்லை. இவ்வாறு அவர் கூறினார்.



# அமெரிக்க ஓபன் டென்னிஸ் இறுதிப்போட்டிக்கு முன்னேறியது போபண்ணா ஜோடி

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயார்க் நகரில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் இரட்டையர் பிரிவின் அரையிறுதி ஆட்டம் நடந்தது. இதில் இந்தியாவின் ரோகன் போபண்ணா, ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டென் ஜோடி, பிரான்சின் நிகோலஸ் மஹுத், பியர் ஹியுஸ் ஹெர்பெர்ட் ஜோடியுடன் மோதியது. இதில் போபண்ணா ஜோடி 76 (73), 62 என்ற நேர்செட் கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. 13 ஆண்டுகளுக்குப் பிறகு ரோகன் போபண்ணா அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.